**சுருக்கம்**

நெடுஞ்சாலைத் துறை – தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் – III உலக வங்கி நிதியுதவியில் உள்ள சேமிப்பில் இருந்து சென்னை நகரில் 7 நடை மேம்பாலப் பணிகள் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.டபிள்யு1) துறை

அரசாணை (டி) எண்.197 நாள்: 18 –10–2010,
ஐப்பசி–1, திருவள்ளுவர் ஆண்டு 2041.

படிக்கப்பட்டது :–

1. அரசாணை (நிலை) எண்.247, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.எ.2) துறை, நாள் 16–12–2009.
2. தலைமைப் பொறியாளர் (நெ), பெருநகரம், கடித எண். 465/ AE/2008, நாள் 19–08–2010.

*******

**ஆணை :–**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் உலக வங்கியின் நிதியாதாரத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III ல் போக்குவரவு மற்றும் போக்குவரத்து திட்டத்தின் கீழ் சென்னை நகர போக்குவரத்து மேம்பாட்டிற்காக ரூ.188.60 கோடி அனுமதிக்கப்பட்டு, அதில் ரூ.174.80 கோடி நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்பட்டது. அதில் ரூ.93.3430 கோடிக்கு 5 சாலைப் பணி திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கான மறு நிதியொதுக்கத்தில் சாலைப் பணிக்காக ரூ.145.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, அதற்கான இறுதி மதிப்பீடு ரூ.116.00 கோடியாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளதால், மீதமுள்ள ரூ.29 கோடி சேமிப்பு (savings) ஏற்பட்டுள்ளது.

2. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அவர்கள் மேற்படி சேமிப்பு தொகையான ரூ.29.00 கோடியை பயன்படுத்தி கூடுதல் பணிகள் மேற்கொள்ள கருத்துருவை அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) அவர்களை கேட்டுக் கொண்டார். அதனடிப்படையில் தலைமைப் பொறியாளர் (பெருநகரம்), சென்னை நகரில் 7 தானியங்கி நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலம் அமைக்க ரூ.28.00 கோடி மதிப்பீட்டில் உலக வங்கிக்கு பரிந்துரைக்க அரசு மூலமாக கருத்துரு அனுப்பியிருந்தார். அக்கருத்துருவிற்கு உலக வங்கி 06–05–2010 நாளிட்ட மின்னஞ்சலில் கொள்கையளவில் இசைவளித்தது. இது தொடர்பாக மேல் நடவடிக்கை தொடர கீழ்க்கண்ட 7 தானியங்கி நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலங்கள் அமைக்க ஒவ்வொன்றும் ரூ.4 கோடியில் ரூ.28.00 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்குமாறு மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தலைமைப் பொறியாளர் (நெ), பெருநகரம் அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டார்.

| | |
|---|---|
| (i) | ஜி.எஸ்.டி. சாலை கி.மீ.22/900 ல் குரோம்பேட்டை அரசு மருத்துவமனை அருகில். |
| (ii) | ஜி.எஸ்.டி. சாலை கி.மீ.24/100 ல் MEPZ அருகில். |
| (iii) | ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை கி.மீ. 7/7 ல் (GWD Road) வைஷ்ணவ கல்லூரி அருகில். |

| | |
|---|---|
| (iv) | உள்வட்ட சாலை கி.மீ. 10/6 ல் எஸ்.பி.ஐ.ஓ.ஏ பள்ளி மற்றும் சாலை சந்திப்பு அருகில் |
| (v) | தரமணி இணைப்பு சாலை கி.மீ.1/2 ல் T.C.S. அருகில் |
| (vi) | தரமணி இணைப்பு சாலை கி.மீ.2/6 ல் பெருங்குடி சந்திப்பு அருகில் |
| (vii) | வேளச்சேரி புறவழிச்சாலை கி.மீ.1/2 ல் ரத்னா கேப் அருகில். |

கடந்த 29–07–2010 அன்று தலைமைச் செயலாளர் தலைமையில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும பகுதியில் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களை முன்னுரிமை வரிசையில் இறுதி செய்யும் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு, செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டது.

3. இப்பணிகள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு செயல்படுத்தப்படுதல் வேண்டும் :–

(i) இவ்வாறு அமைக்கப்படும் நடைமேம்பாலங்களில் தானியங்கி படிக்கட்டுகளுடன், பொதுமக்கள் ஏறி இறங்குவதற்கு (படிக்கட்டுகளுக்கு பதிலாக) மிக நீளமாக இல்லாமல், மடிந்த நிலையில் சாய்தளமான (Folding Type Ramp Dog legged) அமைப்பு நிறுவப்படுதல் வேண்டும்.

(ii) ஆகஸ்டு 2010 இல் உலக வங்கி குழுவினர் வருகை நடவடிக்கை பதிவுக்குறிப்புகள் (Aide Memoire) பத்தி 22, பத்தி 5–ன் பின் இணைப்பு 9 மற்றும் பத்தி 4 ன் பின்இணைப்பு 4 ல் குறிப்பிடப்பட்டதற்கிணங்க இப்பணிகள் செயல்படுத்தப்படுதல் வேண்டும்.

(iii) உலக வங்கியுடன் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, நகரும் படிகட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலங்கள் / சாய்தள அமைப்புடன் கூடிய நடைமேம்பாலங்களை அமைக்குமாறும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் போது ஒவ்வொரு இடத்திற்கு ஏற்றாற்போல் நகரும் படிக்கட்டுடன் கூடிய நடைமேம்பாலங்கள் / சாய்தள அமைப்புடன் வடிவமைக்கப்பட வேண்டும் எனவும் இதன் காரணமாக ஏற்படும் மீதத்தை போக்குவரத்து திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்தலுக்காக கூடுதல் உபகரணங்கள் வாங்க பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

4. மேற்கண்ட நிலையில், தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) அவர்களின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்து, அதனை ஏற்று சென்னை நகரில் தானியங்கி படிகட்டுகளுடன் (Foot Over Bridges with Escalators) கூடிய 7 நடை மேம்பாலங்களை, அமைப்பதற்கு ரூ.28.00 கோடியில் உலக வங்கியின் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III ன் சேமிப்புத் தொகையில் கூடுதல் பணிகளாக மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணையிடுகிறது.

5. இவ்வரசாணை நிதித்துறை இசைவுடன் அ.சா. எண்.57177/வீ.வ/2010, நாள் 13–10–2010 இன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ. சந்தானம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (நெ), பெருநகரம், சென்னை–16.
தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5.
நிதித் (பொ.ப–I வீ.வ) துறை, சென்னை–9.

மாநிலக் கணக்காயர், சென்னை–18.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம் சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்)
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9
அரசு செயலாளரின் தனிச் செயலர், நெடுஞ்சாலை மற்றும்
சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9.
உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை–8.
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.